# <u>அரியலூர் நகராட்சி</u>

<table>
<tr><th>Date of Meeting of the Council</th><th>MCR No.</th><th>Serial Number and subject in the Agenda</th><th>Decision of the Council</th></tr>
<tr><td colspan="4">அரியலூர் நகராட்சியின் சாதாரணக்கூட்டம் நிகழும் சுபகிருது வருடம் 17.08.2022ம் தேதி புதன்கிழமை முற்பகல் 11.05 மணிக்கு நகர்மன்றத்தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெறும். அது தொடர்பான கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.</td></tr>
<tr><td>17.08.2022</td><td>100</td><td>அரியலூர் நகராட்சியின் 2022–23ம் நிதியாண்டிற்கு தயார் செய்யப்பட்ட வரவு செலவு திட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>17.08.2022</td><td>101</td><td>ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது</td><td></td></tr>
<tr><td>17.08.2022</td><td>102</td><td>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் உத்திரவு கடிதம் ந.க.எண்.9512/2022/SBM-1, நாள்.20.06.2022ன்படி, தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம் 2.0)ன் கீழ் ரூ.114.85 இட்சம் மதிப்பீட்டில் அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான திருச்சி சாலையில் உள்ள உரக்கிடங்கில் சேகரமாகியுள்ள மரபுக்கழிவுகளை (Legacy Waste) Bio Mining மூலம் அப்புறப்படுத்தும் பணிக்கு நிர்வாக அனுமதி அளித்து கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்)</th><th colspan="3">நிதி ஒதுக்கீடு விபரம் (Funding pattern)</th></tr>
<tr><td>1</td><td>திருச்சி சாலையில் உள்ள உரக்கிடங்கில் சேகரமாகியுள்ள மரபுக்கழிவுகளை (Approximately 16055 cum) Bio Mining மூலம் அப்புறப்படுத்தும் பணி</td><td>114.85</td><td>GOI (50%)</td><td>GOTN (33%)</td><td>ULB (17%)</td></tr>
</table>
அலுவலகக்குறிப்பு<br>பொது சுகாதாரப்பணி என்பதால் திட்ட பணியினை விரைந்து முடித்திட நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளபட்ட நடவடிக்கைகளை மன்றம் பதிவு செய்யலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>17.08.2022</td><td>103</td><td>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் 07.07.2022ம் தேதி நேரடி ஆய்வின் போது அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையில் நுண்ணிய கலவை உரக்கிடங்கில் கசிவு நீர்த்தொட்டி அமைக்க அறிவுரை வழங்கப்பட்டதின்படி, தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ.42,000/–திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மேற்காணும் பணியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>17.08.2022</td><td>104</td><td>நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் (புதி) துறை அரசாணை (நிலை) எண்.71, நாள்.13.09.2021ல் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள அனுமதித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுரையின்படி அரியலூர் நகராட்சியில் மேற்காணும் திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள ரூ.1.50 இலட்சம் பொது மக்கள் பங்களிப்புடனும், ரூ.2.75 இலட்சம் அரசு மான்யமாகவும் மொத்தம் ரூ.4.25 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண்.16, நாள்.21.01.2022 அன்று ஒப்புதல் பெறப்பட்டதின்படி, 22.04.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள்</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>105</td><td>விபரம் பின்வருமாறு.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>திரு.R.சுதாகர், பெரம்பலூர்</td><td>மதிப்பீட்டை விட 2.83 சதவீதம் அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>அம்மன் கன்ஸ்டிரக்சன், நல்லறிக்கை</td><td>மதிப்பீட்டை விட 0.36 சதவீதம் குறைவு</td></tr>
</table>
மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.36 சதவீதம் குறைவான கொடுத்த அம்மன் கன்ஸ்டிரக்சன், நல்லறிக்கை என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
அலுவலகக்குறிப்பு<br>
பொது மக்கள் நலன் சார்ந்த பணி என்பதால் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>17.08.2022</td><td>105</td><td>அரியலூர் நகராட்சியின் நகர்மன்றத்தலைவர் மற்றும் பொறியாளருக்கு என இரண்டு எண்ணிக்கையிலான ஈப்பு வாகனங்கள் (பொலிரோ வாகனம்) அரசு நிர்ணயித்துள்ள விலை விகிதத்தில் வாங்கிட ரூ.22.00 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.44, நாள்.12.04.2022ன்படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. ஆனால், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.1725/2022/எம்3, நாள்.06.05.2022ன்படி, நகர்மன்ற தலைவருக்கு ஸ்கார்பியோ வாகனம் வாங்க அனுமதி வழங்கப்பட்டதின்படி, புதிய வாகனங்கள் கொள்முதல் செய்திட பொலிரோ வாகனத்திற்கு ரூ.918373/- மற்றும் ஸ்கார்பியோ வாகனத்திற்கு ரூ.1631805/-னை M/s.Mahindra & Mahidra Ltd, P.K.Kurne Chowk, G.M.Bhosale M, Munbai, Maharashtra என்ற நிறுவனத்திற்கு ரூ.25,50,178/-னை செலுத்தவும், இந்நகர்மன்ற தீர்மானம் எண்.44ல் ஒப்புதல் பெறப்பட்ட தொகையைவிட கூடுதலான தொகை ரூ.3,50,178/-னை சேர்த்து மேற்படி நிறுவனத்திற்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
1. மேற்காணும் தொகையினை பொது நிதியிலிருந்து வழங்கலாம்.<br>
2. மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>17.08.2022</td><td>106</td><td>அரியலூர் நகராட்சியின் பழைய பேருந்து நிலையத்தினை இடித்துவிட்டு புதிய பேருந்து நிலையம் அமைக்க திட்டபிரேரணை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போது உள்ள பழைய பேருந்து நிலையத்தின் உறுதிதன்மையை ஆய்வு செய்து அறிக்கை பெற்றிட அரசு கல்வி நிறுவனமாக தேசிய தொழில்நுட்ப நிறுவனம் (NIT), திருச்சி மூலம் ஆய்வு செய்வதற்கான ஆய்வுக்கட்டணம் ரூ.53100/- செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
1. மேற்காணும் தொகையினை பொது நிதியிலிருந்து வழங்கலாம்.<br>
2. மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>17.08.2022</td><td>107</td><td>அரியலூர் நகராட்சி அரியலூர் தெற்கு கிராம புலஎண். 483/3,4,5,6,7A,7B,8,485/1D,1E, மற்றும் 486/3 208216 4.78 ஏக்கர் (208216ச.அடி) பரப்பளவு கொண்ட இடத்தில் மனுதாரர் S.R.செந்தில் என்பவரால் பாலாஜி நகர் என அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவினை ஊரமைப்பு துறை உதவி இயக்குநர், பெரம்பலூர் மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள் கடிதம் ந.க.எண்.1064/2027/ நாள்.30.11.2018 மனைப்பிரிவிற்கு ம.வ./ந.ஊ.உ.இ.எண்.246/2018 பெ.ம என எண்ணிடப்பட்டு கொள்கை அளவிலான மனைபிரிவு ஒப்புதல் வழங்கியுள்ளார்கள்.<br>
மனுதாரர் அரியலூர் தெற்கு கிராம புலஎண்.483/3,4,5,6,7A,7B,8,485/1D,1E, மற்றும் 486/3 208216 4.78 ஏக்கர் (208216ச.அடி) பரப்பளவு இடத்தில் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற மனைப்பிரிவில் 50 எண்ணிக்கை மனைகளை மனைவரன்முறைப்படுத்தி அனுமதி வழங்கிட கோரியுள்ளார்.<br>
மேற்படி மனைபிரிவில் பொது உபயோக பயன்பாட்டிற்கான பொது திறவிடங்கள், பூங்கா மற்றும் பொதுபாதைகள் நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்டுள்ளவாறு பொதுப்பாதைகள் மற்றும் பூங்காவிற்கு</td><td>ஒத்திவைக்கப் பட்டது</td></tr>
</table>

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது திறவிடங்கள் ஆகியவற்றினை திரு, S.R.செந்தில் **இனாம் சாசனம்** பத்திர பதிவு ஆவணம் எண்.931/2022/BK1-ன்படி அரியலூர் 1நெ இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் 19.04.2022-ல் நகராட்சி ஆணையருக்கு இனாம் சாசனம் பத்திர மூலமாக பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. தான பத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்ட சாலைகள், பூங்காக்கள் மற்றும் பொது திறவிடங்கள் விபரம் பின்வருமாறு.

**உத்தேச சாலை எண்1 :**

சர்வே எண்.486/3–0.16.00 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 0 செண்ட் 40–லும், சர்வே எண்.485/1– ஆனது தற்கால உட்பிரிவிற்கு பிறகு சர்வே எண்.485/1D – 0.26.50 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 0 செண்ட் 65–லும், சர்வே எண்.485/1– ஆனது தற்கால உட்பிரிவிற்கு பிறகு சர்வே எண்.485/1C – 0.65.00 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 1 செண்ட் 61–லும் சம்மந்தப்பட்டதில்.

| | |
|---|---|
| வடக்கில் | 30 அடி அகலமுள்ள பொதுப்பாதை |
| கிழக்கில் | சர்வே எண்.496 |
| மேற்கில் | பூங்கா, பிளாட் எண்கள்.127,126,125,124 |
| தெற்கில் | பிளாட் எண்கள்.129,131,133,134, உத்தேச சாலை எண்.2 |

இந்த நான்கெல்லைக்குள்பட்டதில் 7390.50 சதுரடிக்கு சமமான 686.60 ச.மீட்டர்ஸ் உள்ள உத்தேச சாலை.

மேற்படி சொத்து தற்கால சப்டிவிஷனுக்கு பிறகு கூட்டுப்பட்டா எண்.19569–ன் படி அ.ந.ச.எண்.486/3 – 0.16.00 ஏர்ஸிலும், கூட்டுப்பட்டா எண்.1954–ன் படி அ.ந.ச.எண்.485/1D1A1A1A1 – 0.14.18 ஏர்ஸிலும், கூட்டுப்பட்டா எண்.2138–ன் படி அ.ந.ச.எண்.485/1CA1A – 0.51.15 ஏர்ஸிலும் சம்மந்தப்பட்டது.

**உத்தேச சாலை எண்2 :**

சர்வே எண்.486/3–0.16.00 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 0 செண்ட் 40–ல் சம்மந்தப்பட்டதில்.

| | |
|---|---|
| வடக்கில் | பிளாட் எண்கள்.131,132 |
| கிழக்கில் | சர்வே எண்.487 |
| மேற்கில் | உத்தேச சாலை எண்.1 |
| தெற்கில் | பிளாட் எண்கள்.129,130 |

இந்த நான்கெல்லைக்குள்பட்டதில் 2213.75 சதுரடிக்கு சமமான 205.66 ச.மீட்டர்ஸ் உள்ள உத்தேச சாலை.மேற்படி சொத்து தற்கால சப்டிவிஷனக்கு பிறகு கூட்டுப்பட்டா எண்.19569–ன் படி அ.ந.ச.எண்.486/3–0.16.00 ஏர்ஸில் சம்மந்தப்பட்டது.

**உத்தேச சாலை எண்3 :**

சர்வே எண்.485/1– ஆனது தற்கால உட்பிரிவிற்கு பிறகு சர்வே எண்.485/1D – 0.26.50 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 0 செண்ட் 65–லும், சர்வே எண்.485/1–ஆனது தற்கால உட்பிரிவிற்கு பிறகு சர்வே எண்.485/1E – 0.06.50 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 0 செண்ட் 16–லும், சர்வே எண்.483/7–0.17.00 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 0 செண்ட் 42–லும், சர்வே எண்.483/6–0.15.50 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 0 செண்ட் 38–லும் சம்மந்தப்பட்டதில்.

| | |
|---|---|
| வடக்கில் | உத்தேச சாலை எண்.6 |
| கிழக்கில் | பிளாட் எண்கள்.114, 115, 116, 117, 118, 119, 120, 121, 122 |
| மேற்கில் | பூங்கா,பிளாட் எண்கள்.135, 136, 113, 112, 111, 110, 109 |
| தெற்கில் | சர்வே எண்.496 |

இந்த நான்கெல்லைக்குள்பட்டதில் 7003.50 சதுரடிக்கு சமமான 650.64 ச.மீட்டர்ஸ் உள்ள உத்தேச சாலை.

மேற்படி சொத்து தற்கால சப்டிவிஷனுக்கு பிறகு கூட்டுப்பட்டா எண்.1945–ன் படி அ.ந.ச.எண்.485/1D1A1A1A1 – 0.14.18 ஏர்ஸிலும், கூட்டுப்பட்டா எண்.1918–ன் படி அ.ந.ச.எண்.485/1E – 0.06.50 ஏர்ஸிலும், கூட்டுப்பட்டா எண்.2187–ன் படி அ.ந.ச.எண்.483/7A1A – 0.07.03 ஏர்ஸிலும், கூட்டுப்பட்டா எண்.1977–ன் படி அ.ந.ச.எண்.483/8A – 0.16.98 ஏர்ஸிலும், சம்மந்தப்பட்டது.

**உத்தேச சாலை எண்4 :**

சர்வே எண்.483/3 – 0.65.50 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 1 செண்ட் 62–லும், சர்வே

எண்.483/4–0.14.00 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 0 செண்ட் 35–லும் சம்மந்தப்பட்டதில்.

| | |
|---|---|
| வடக்கில் | உத்தேச சாலை எண்.6 |
| கிழக்கில் | பிளாட் எண்கள்.135,137,108,107,106,105,104 |
| மேற்கில் | பூங்கா,பிளாட் எண்கள்.100,102,103 |
| தெற்கில் | சர்வே எண்.496 |

இந்த நான்கெல்லைக்குள்பட்டதில் 4427.50 சதுரடிக்கு சமமான 411.32 ச.மீட்டர்ஸ் உள்ள உத்தேச சாலை.

மேற்படி சொத்து தற்கால சப்டிவிஷனுக்கு பிறகு கூட்டுப்பட்டா எண்.2178–ன் படி அ.ந.ச.எண்.483/17–0.43.51 ஏர்ஸிலும் சம்மந்தப்பட்டது.

**உத்தேச சாலை எண்5 :**

சர்வே எண்.483/3 – 0.65.50 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 1 செண்ட் 62–ல் சம்மந்தப்பட்டதில்.

| | |
|---|---|
| வடக்கில் | உத்தேச சாலை எண்.6 |
| கிழக்கில் | பிளாட் எண்கள்.99,98 |
| மேற்கில் | சர்வே எண்கள்.481,482 |
| தெற்கில் | பிளாட் எண்.101 |

இந்த நான்கெல்லைக்குள்பட்டதில் 1909 சதுரடிக்கு சமமான 177.35 ச.மீட்டர்ஸ் உள்ள உத்தேச சாலை.

மேற்படி சொத்து தற்கால சப்டிவிஷனுக்கு பிறகு கூட்டுப்பட்டா எண்.2178–ன் படி அ.ந.ச.எண்.483/17– 0.43.51 ஏர்ஸில் சம்மந்தப்பட்டது.

**உத்தேச சாலை எண் 6 :**

சர்வே.எண்.483/3–0.65.50 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 1 செண்ட் 62–லும், சர்வே, எண்.483/4 – 0.14.00 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 0 செண்ட் 35–லும், சர்வே எண்.485/5–0.14.00 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 0 செண்ட் 35–லும், சர்வே எண்.483/6–0.15.50 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 0 செண்ட் 38–லும், சர்வே எண்.483/7–0.17.00 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 0 செண்ட் 42–லும், சர்வே எண்.485.1– ஆனது தற்கால உட்பிரிவிற்கு பிறகு சர்வே எண்.485/1C –0.65.00 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 1 செண்ட் 61–லும் சம்மந்தப்பட்டதில்.

| | |
|---|---|
| வடக்கில் | உத்தேச சாலை எண்.7 மற்றும் பிளாட் எண்கள்.87, 88, 89, 90, 91, 92, 93, 94, 95, 96, 97 |
| கிழக்கில் | 30 அடி அகலமுள்ள பொதுப்பாதை |
| மேற்கில் | சர்வே எண்.481 |
| தெற்கில் | உத்தேச சாலை எண்கள்.5,4,3 மற்றும் பிளாட் எண்கள்.98,103, 104, 109, 114 |

இந்த நான்கெல்லைக்குள்ப்பட்டதில் 12555 சதுரடிக்கு சமமான 1166.3867 ச.மீட்டர்ஸ் உள்ள உத்தேச சாலை.

இந்த நான்கெல்லைக்குள்பட்டதில் 12555 சதுரடிக்கு சமமான 1166.3867 ச.மீட்டர்ஸ் உள்ள உத்தேச சாலை.

**உத்தேச சாலை எண் 7 :**

சர்வே.எண்.483/3–0.65.50 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 1 செண்ட் 62–லும், சர்வே, எண்.483/4 – 0.14.00 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 0 செண்ட் 35–லும், சர்வே எண்.488/8–0.18.50 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 0 செண்ட் 46–லும் சம்மந்தப்பட்டதில்.

| | |
|---|---|
| வடக்கில் | உத்தேச சாலை எண்.10 |
| கிழக்கில் | பிளாட் எண்கள்.91, 83, 67, 66 மற்றும் உத்தேச சாலை எண்.9 |
| மேற்கில் | பிளாட் எண்கள்.90, 83, 65 மற்றும் உத்தேச சாலை எண்.8 |
| தெற்கில் | உத்தேச சாலை எண்.6 |

இந்த நான்கெல்லைக்குள்ப்பட்டதில் 4772.50 சதுரடிக்கு சமமான 443.37 ச.மீட்டர்ஸ் உள்ள உத்தேச சாலை.

மேற்படி சொத்து தற்கால சப்டிவிஷனுக்கு பிறகு கூட்டுப்பட்டா எண்.2178–ன் படி அ.ந.ச.எண்.483/17 – 0.43.51 ஏர்ஸிலும், கூட்டுப்பட்டா எண்.2165–ன் படி அ.ந.ச.எண்.483/4A – 0.02.75 ஏர்ஸிலும் கூட்டுப்பட்டா எண்.1977–ன் படி

அ.ந.ச.எண்.483/8A – 0.16.98 ஏர்ஸிலும் சம்மந்தப்பட்டது.

**<u>உத்தேச சாலை எண் 8 :</u>**

சர்வே.எண்.483/3–0.65.50 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 1 செண்ட் 62–ல் சம்மந்தப்பட்டதில்.

| | |
|---|---|
| வடக்கில் | பிளாட் எண்கள்.62, 63, 64, 65 |
| கிழக்கில் | உத்தேச சாலை எண்.7 |
| மேற்கில் | சர்வே எண். 481 |
| தெற்கில் | பிளாட் எண்கள்.86, 85, 84, 83 |

இந்த நான்கெல்லைக்குள்ப்பட்டதில் 3277.50 சதுரடிக்கு சமமான 304.48 ச.மீட்டர்ஸ் உள்ள உத்தேச சாலை.மேற்படி சொத்து தற்கால சப்டிவிஷனுக்கு பிறகு கூட்டுப்பட்டா எண்.2178–ன் படி அ.ந.ச.எண்.483/17 – 0.43.51 ஏர்ஸிலும் சம்மந்தப்பட்டது.

**<u>உத்தேச சாலை எண் 9 :</u>**

சர்வே எண்.483/4– 0.14.00 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 0 செண்ட் 35–லும், சர்வே எண்.485/1–ஆனது தற்கால உட்பிரிவிற்கு பிறகு சர்வே எண்.485/1D – 0.26.50 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 0 செண்ட் 65–லும், சர்வே எண்.483/6–0.15.50 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 0 செண்ட் 38–லும், சர்வே எண்.483/7–0.17.00 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 0 செண்ட் 42–லும், சர்வே எண்.485/1 – ஆனது தற்கால உட்பிரிவிற்கு பிறகு சர்வே எண்.485/1C – 0.65.00 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 1 செண்ட் 61–லும் சம்மந்தப்பட்டதில்.

| | |
|---|---|
| வடக்கில் | உத்தேச சாலை எண்.7 மற்றும் பிளாட் எண்கள்.62, 63, 64, 65, 67, 69, 71,73,75 |
| கிழக்கில் | 30 அடி அகலமுள்ள பொதுப்பாதை |
| மேற்கில் | சர்வே எண்.481 |
| தெற்கில் | உத்தேச சாலை எண்.7 மற்றும் பிளாட் எண்கள்.87, 88, 89, 90, 91, 92, 93, 94, 95, 96, 97 |

இந்த நான்கெல்லைக்குள்பட்டதில் 5750 சதுரடிக்கு சமமான 534.18 ச.மீட்டர்ஸ் உள்ள உத்தேச சாலை.

மேற்படி சொத்து தற்கால சப்டிவிஷனுக்கு பிறகு கூட்டுப்பட்டா எண்.2165–ன் படி அ.ந.ச.எண்.483/4A – 0.02.75 ஏர்ஸிலும், கூட்டுப்பட்டா எண்.1954–ன் படி அ.ந.ச.எண்.485/1D1A1A1A1– 0.14.18 ஏர்ஸிலும், கூட்டுப்பட்டா எண்.19846–ன் படி அ.ந.ச.எண்.483/6A1A1 – 0.04.38 ஏர்ஸிலும், கூட்டுப்பட்டா எண்.2187–ன் படி அ.ந.ச.எண்.483/483/7A1A – 0.07.03 ஏர்ஸிலும், அ.ந.ச.எண்.483/7B1 – 0.06.62 ஏர்ஸிலும், கூட்டுப்பட்டா எண்.2138–ன் படி அ.ந.ச.எண்.485/483/1C1A1A1 – 0.51.15 ஏர்ஸிலும், சம்மந்தப்பட்டது.சம்மந்தப்பட்டது.

**<u>உத்தேச சாலை எண் 10 :</u>**

சர்வே.எண்.483/3–0.65.50 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 1 செண்ட் 62–லும் சர்வே எண்.483/8 – 0.18.50ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 0 செண்ட் 46–லும் சம்மந்தப்பட்டதில்.

| | |
|---|---|
| வடக்கில் | பிளாட் எண்கள்.61, 60, 59, 58, 57, 56, 55 |
| கிழக்கில் | 23 அடி அகலமுள்ள பொதுப்பாதை |
| மேற்கில் | சர்வே எண். 481 |
| தெற்கில் | உத்தேச சாலை எண்.7 மற்றும் பிளாட் எண்கள்.62, 63, 64, 65, 66, 68 |

இந்த நான்கெல்லைக்குள்ப்பட்டதில் 5380.50 சதுரடிக்கு சமமான 499.86 ச.மீட்டர்ஸ் உள்ள உத்தேச சாலை.மேற்படி சொத்து தற்கால சப்டிவிஷனுக்கு பிறகு கூட்டுப்பட்டா எண்.2178–ன் படி அ.ந.ச.எண்.483/17 – 0.43.51 ஏர்ஸிலும், கூட்டுப்பட்டா எண்.1977–ன் படி அ.ந.ச.எண்.483/8A – 0.16.98 ஏர்ஸிலும், சம்மந்தப்பட்டது.

**<u>பூங்கா 1 :</u>**

சர்வே எண்.483/3 – 0.65.50 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 1 செண்ட் 62–ல் சம்மந்தப்பட்டதில்.

| | |
|---|---|
| வடக்கில் | பிளாட் எண்கள்.101,100 |
| கிழக்கில் | உத்தேச சாலை எண்.4 |
| தெற்கில் | சர்வே எண்.496 |

இந்த நான்கெல்லைக்குள்ப்பட்டதில் 2447.44 சதுரடிக்கு சமமான 227.37

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
ச.மீட்டர்ஸ் உள்ள பூங்கா.<br>
மேற்படி சொத்து தற்கால சப்டிவிஷனுக்கு பிறகு கூட்டுப்பட்டா எண்.2178–ன் படி அ.ந.ச.எண்.483/17 – 0.43.51 ஏர்ஸில் சம்மந்தப்பட்டது.<br>
<u>பூங்கா 2 :</u><br>
சர்வே எண்.483/3 – 0.65.50 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 1 சென்ட் 62–லும், சர்வே எண்.485/1 – ஆனது தற்கால உட்பிரிவிற்கு பிறகு சர்வே எண்.485/1E – 0.06.50 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 0 சென்ட் 16–லும் சம்மந்தப்பட்டதில்.
<table>
<tr><td>வடக்கில்</td><td>பிளாட் எண்கள்.135</td></tr>
<tr><td>கிழக்கில்</td><td>உத்தேச சாலை எண்.3</td></tr>
<tr><td>தெற்கில்</td><td>சர்வே எண்.496</td></tr>
</table>
இந்த நான்கெல்லைக்குள்ப்பட்டதில் 3016.29 சதுரடிக்கு சமமான 280.22 ச.மீட்டர்ஸ் உள்ள பூங்கா.<br>
மேற்படி சொத்து தற்கால சப்டிவிஷனுக்கு பிறகு கூட்டுப்பட்டா எண்.2178–ன் படி அ.ந.ச.எண்.483/17 – 0.43.51 ஏர்ஸிலும், கூட்டுப்பட்டா எண்.1918–ன் படி அ.ந.ச.எண்.453/1E – 0.06.50 ஏர்ஸில் சம்மந்தப்பட்டது.<br>
<br>
<u>பூங்கா 3 :</u><br>
சர்வே எண்.486/3 – 0.16.00 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 0 சென்ட் 40–லும், சர்வே எண்.485/1 – ஆனது தற்கால உட்பிரிவிற்கு பிறகு சர்வே எண்.485/1D – 0.26.50 ஏர்ஸ்க்கு சமமான ஏக்கர் 0 சென்ட் 65–லும் சம்மந்தப்பட்டதில்.
<table>
<tr><td>வடக்கில்</td><td>பிளாட் எண்கள்.122,127</td></tr>
<tr><td>கிழக்கில்</td><td>உத்தேச சாலை எண்.1</td></tr>
<tr><td>தெற்கில்</td><td>சர்வே எண்.496</td></tr>
</table>
இந்த நான்கெல்லைக்குள்ப்பட்டதில் 5334.50 சதுரடிக்கு சமமான 495.58 ச.மீட்டர்ஸ் உள்ள பூங்கா.<br>
மேற்படி சொத்து தற்கால சப்டிவிஷனுக்கு பிறகு கூட்டுப்பட்டா எண்.19569–ன் படி அ.ந.ச.எண்.486/3 – 0.16.00 ஏர்ஸிலும், கூட்டுப்பட்டா எண்.1954–ன் படி அ.ந.ச.எண்.485/1D1A1A1A1– 0.14.18 ஏர்ஸிலும் சம்மந்தப்பட்டது. ஆகவே மேற்படி இனங்கள் முழுவதும் இந்த பெயரளவிலான நன்கொடை ஆவணத்தில் சம்மந்தப்பட்டது.<br>
அரியலூர் தெற்கு கிராம புலஎ483/3,4,5,6,7A,7B,8,485/1D,1E, மற்றும் 486/3 208216 4.78 ஏக்கர் (208216ச.அடி) பரப்பளவு இடத்தில் அமைக்கப்பட்டுள்ள மொத்தம் உள்ள 81 மனைகளில், ஏற்கனவே விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை 31 ஆகும். மேலும் விற்கப்படாத 50 எண்ணிக்கை மனைகளில் வருவாய் கோட்டாட்சியர் அரியலூர் அவர்களின் கடிதம் ந.க.அ4/1287/2022 நாள்.31.05.2022 கடிதத்தில் புல எண் 483/8 ல் 0.18.5 ஏர்ஸில் உள்ள மனை எண்கள்.55,56,57,58,59,60,61,64,மற்றும் 65 ஆகிய மனைகள் அனாதீன அரசு புறம்போக்கு நிலத்தில் உள்ளதால் மேற்படி 9 மனைகளை தவிர்த்து இதர 41 மனைகளுக்கு மட்டும் மனை வரன்முறைப்படுத்தி DTCP அனுமதி வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு<br>
அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று அரியலூர் தெற்கு கிராம புலஎண்.483/3,4,5,6,7A,7B,8,485/1D,1E, மற்றும் 486/3 208216 4.78 ஏக்கர் (208216ச.அடி) என்ற பரப்பளவு இடத்தில் அமைக்கப்பட்டுள்ள மொத்தம் உள்ள 81 மனைகளில், ஏற்கனவே விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை 31 ஆகும். மேலும் விற்கப்படாத 41 எண்ணிக்கையிலான மனைகளுக்கு மட்டும் மனைவரன்முறைப்படுத்தி அனுமதி வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>17.08.2022</td>
<td>108</td>
<td>அரியலூர் நகராட்சி வருவாய் உதவியாளர் திரு.வீரமணி என்பவர் 04.02.2014 அன்று லஞ்ச ஒழிப்பு துறையினரால் கைது செய்யப்பட்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் (வழக்கு எண்.W.P.No.2132/2014) வழக்கு நடைபெற்று வருகிறது. மேற்படி, வழக்கு 22.07.2022 அன்று சென்னை உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த நிலையில் அரியலூர் நகராட்சி சார்பாக அரசு வழக்கறிஞர் திரு.ஆர்.ரவிச்சந்திரன்</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>வழக்காடியதற்காக வழக்காடு கட்டணமாக ரூ.30,000/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம்</td><td></td></tr>
<tr><td>17.08.2022</td><td>109</td><td>அரியலூர் தினசரி மார்க்கெட்டில் கட்டண கழிவறை அருகில் உள்ள அறை எண்.01 உரிமத்திற்கு 03.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறுதல், ஏலம் நடைபெற்றது. அப்போது கீழ்கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலத்தில் கலந்துக்கொண்டவர் விபரம்.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை</th><th>ஏலக்கேள்வி</th></tr>
<tr><td>1</td><td>திரு.செ.கலியமூர்த்தி,<br>த/பெ.Rசெல்வராஜ்,<br>2B பஞ்சுப்பட்டறைத்தெரு,<br>அரியலூர்</td><td>–</td><td>ரூ.2,700/–</td></tr>
<tr><td>2</td><td>திரு.மூ.குமரேசன்,<br>த/பெ.மூர்த்தி,<br>7பி காமாராஜர் நகர்,<br>அரியலூர்</td><td>–</td><td>ரூ.2,650/–</td></tr>
</table>
மேற்கண்டுள்ள இரண்டு ஏலதாரர்களில் ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை. ஏலக்கேள்வி இரண்டு ஏலதாரர்களில் ஒன்றாவது ஏலதாரராகிய திரு.செ.கலியமூர்த்தி உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி ரூ.2,700/– கேட்டுள்ளார். இந்த கேள்வி தொகை கடந்த ஆண்டு ஏலத்தொகையை காட்டிலும் கடந்து மூன்று ஆண்டுகளில் சராசரி தொகையைக்காட்டிலும் கூடுதலாக உள்ளது. எனவே, திரு.செ.கலியமூர்த்தி கேட்டுள்ள கேள்வி தொகையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**அலுவலகக்குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>17.08.2022</td><td>110</td><td>மாண்புமிகு அமைச்சர் நகராட்சி நிர்வாகத்துறை அவர்களின் சட்டமன்ற அறிவிப்பு எண்.22ன்படி, அரியலூர் நகராட்சி அண்ணாசிலை அருகில் புதிய பேருந்து நிலைய கட்டிடம் கட்டும் பணிக்கான திட்டமதிப்பீடு ரூ.780.00 இலட்சத்திற்கு திட்டப்பிரேரணை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி வேண்டி சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>17.08.2022</td><td>111</td><td>மாண்புமிகு அமைச்சர் நகராட்சி நிர்வாகத்துறை அவர்களின் சட்டமன்ற அறிவிப்பு எண்.21ன்படி, அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான தினசரி மார்க்கெட் கட்டிடம் சீரமைத்தல் பணிக்கான திட்டமதிப்பீடு ரூ.120.00 இலட்சத்திற்கு திட்டப்பிரேரணை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி வேண்டி சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>17.08.2022</td><td>112</td><td>மாண்புமிகு அமைச்சர் நகராட்சி நிர்வாகத்துறை அவர்களின் சட்டமன்ற அறிவிப்பு எண்.21ன்படி, அரியலூர் நகராட்சிக்கு சொந்தமான திறந்த வெளியில் உள்ள வாரச்சந்தை இடத்தில் அடிப்படை வசதிகளுடன் கூடிய புதிய வாரச்சந்தை கட்டும் பணிக்கான திட்டமதிப்பீடு ரூ.200.00 இலட்சத்திற்கு திட்டப்பிரேரணை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி வேண்டி சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>17.08.2022</td><td>113</td><td>அரியலூர் நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவு மற்றும் பொறியியல் பிரிவில் பயன்பாட்டில் இல்லாத கழிவு நீக்கம் செய்யும் நிலையில் உள்ள காம்பாக்டர் பின், டம்பர்</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
பிளேசர் பின், தள்ளுவண்டி, மோட்டார்கள் டிரான்பார்மர்கள் மற்றும் வாகனங்களை பொது ஏலத்தில் விடுவதற்காக 03.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறுதல் மற்றும் பொது ஏலம் நடைபெற்றது. அப்போது கீழ்கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலத்தில் கலந்துக்கொண்டவர் விபரம்.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை</th><th>ஏலக்கேள்வி</th></tr>
<tr><td>1</td><td>திரு.LRK.அப்துல் லத்தீப்,<br>திருச்சி – 4</td><td>–</td><td>ரூ.5,11,000/–</td></tr>
<tr><td>2</td><td>திரு.P.குமார்,<br>திருச்சி –1</td><td>–</td><td>ரூ.5,07,000/–</td></tr>
<tr><td>3</td><td>திரு.M.சபரிநாதன்,<br>திருச்சி</td><td>–</td><td>ரூ.5,07,500/–</td></tr>
</table>
மேற்கண்டுள்ள மூன்று ஏலதாரர்களில் ஒப்பந்தப்புள்ளி பெறப்படவில்லை. ஏலக்கேள்வி மூன்று ஏலதாரர்களில் ஒன்றாவது ஏலதாரராகிய திரு.LRK.அப்துல் லத்தீப் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி ரூ.5,11,000/– கேட்டுள்ளார். எனவே, திரு.LRK.அப்துல் லத்தீப் கேட்டுள்ள கேள்வி தொகையினை மன்றம் அங்கீரிக்கலாம்.<br>
அலுவலகக்குறிப்பு<br>
மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>17.08.2022</td>
<td>114</td>
<td>
அரியலூர் நகராட்சி பொதுசுகாதார பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் காம்பேக்டர் வாகனமான (TN.61 C 6872) வாகனம் F.C காண்பிக்கப்பட வேண்டியுள்ளதால், வருடாந்திர பராமரிப்பு பணி மற்றும் பெயிண்ட் அடித்தல் ஆகிய பணிகளுக்காக ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.15,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டி வைக்கப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. பொதுசுகாதார பணி என்பதாலும், பொதுமக்கள் நலன்கருதியும் மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டதையும் அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
<tr>
<td>17.08.2022</td>
<td>115</td>
<td>
அரியலூர் நகராட்சி பொதுசுகாதார பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் காம்பேக்டர் வாகனமான (TN.61 C 6872) வாகனம் F.C காண்பிக்கப்பட வேண்டியுள்ளதால், வருடாந்திர பராமரிப்பு பணி மற்றும் பெயிண்ட் அடித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளுவதற்காக 21.06.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.
<table>
<tr><th>வ. எண்.</th><th>பணியின் விபரம்</th><th>Devi Arts Ariyalur</th><th>Prasanna Arts Ariyalur</th><th>Bala Arts, Ariyalur</th></tr>
<tr><td>1.</td><td>அரியலூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் தூய்மை பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் காம்பேக்டர் வாகனம் (TN. 61 C-6872) தகுதிச் சான்று (F.C.) பெற வேண்டியுள்ளதால், வருடாந்திர பராமரிப்பு மற்றும் பெயிண்ட் அடித்தல் பணிகள்</td><td>Rs.13,000/-</td><td>Rs. 13500/-</td><td>Rs.15000/-</td></tr>
</table>
குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள Devi Arts Ariyalur என்பவரின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.<br>
அலுவலகக்குறிப்பு<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. பொதுசுகாதார பணி என்பதாலும், பொதுமக்கள் நலன்கருதியும் மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டதையும் அனுமதிக்கலாம்.
</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td>17.08.2022</td><td>116</td><td>பொதுசுகாதாரப் பயன்பாட்டிற்கு தேவையான கிருமி நாசினிகள், தளவாடப் பொருட்கள், சமுதாய கழிப்பறைகள் மற்றும் பொதுக் கழிப்பறைகள் சுத்தம் செய்வதற்கு தேவையான கிருமிநாசினிகள், சுண்ணாம்பு, பிளிச்சீங் பவுடர், பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.5,00,000/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>மன்றம் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>17.08.2022</td><td>117</td><td>அரியலூர் நகராட்சி பொதுசுகாதார பிரிவில் பயன்படுத்தப்பட்டு காம்பேக்டர் வாகனத்தின் (TN61 C 6872) அனைத்து சக்கரங்களும் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் உள்ளதால், புதிதாக டயர்கள் மாற்றி அமைக்க உத்தேச செலவினம் ரூ.70,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டி மன்ற ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொதுசுகாதார பணி என்பதாலும், பொதுமக்கள் நலன்கருதியும், மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொள்ளப்பட்டதையும் அனுமதிக்கலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>17.08.2022</td><td>118</td><td>அரசாணை நிலை எண்.88 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.17.06.2022ன்படி, கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2022–23 கீழ் ரூ.57.00 இலட்சம் மதிப்பீட்டில் அரியலூர் நகராட்சியில் சர்வே எண்.586 S.R. நகரில் பூங்கா அமைத்தல் பணிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டதின்படி, 29.07.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>திரு.சுதாகர், பெரம்பலூர்</td><td>மதிப்பீட்டை விட 10.08 சதவீதம் அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>திரு.D.கேசவன், திருச்சி</td><td>மதிப்பீட்டை விட 4.90 சதவீதம் அதிகம்</td></tr>
</table>
வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சுதாகர், பெரம்பலூர் என்பவர் மதிப்பீட்டை விட 10.08% அதிகமாகவும், திரு.D.கேசவன், திருச்சி என்பவர் மதிப்பீட்டை விட 4.90% அதிகமாகவும் கொடுத்துள்ளனர். எனவே, இரு ஒப்பந்தப்புள்ளிகளிலிருந்து குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்த நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி குறைத்து கொடுக்க இந்நகராட்சியின் மூலம் விலை குறைப்பு கடிதம் (Negotiation) அனுப்பட்டது. ஆனால் கூலி ஆட்கள் ஊதிய உயர்வாலும், கட்டுமானப்பொருட்களின் விலை உயர்வாலும் திரு.D.கேசவன், திருச்சி என்பவர் மதிப்பீட்டை விட 0.05% குறைவாக கொடுத்துள்ளார். இதற்கு கீழும் குறைத்து கொடுக்க இயலாது என கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.<br>எனவே, மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படும் காலவிரயம் மற்றும் கூடுதல் செலவினத்தை தவிர்த்திட திரு.D.கேசவன், திருச்சி என்பவரின் விலைப்புள்ளியை ஏற்கலாம். மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>17.08.2022</td><td>119</td><td>அரசாணை நிலை எண்.88 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.17.06.2022ன்படி, கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் (KNMT) 2022–23 கீழ் ரூ.77.00 இலட்சம் மதிப்பீட்டில் அரியலூர் நகராட்சியில் சர்வே எண்.290/4ல் உள்ள பள்ளேரியினை புதுப்பித்தல் பணிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டதின்படி, 29.07.2022 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு</th></tr>
<tr><td>1</td><td>திரு.D.கேசவன், திருச்சி</td><td>மதிப்பீட்டை விட 13.43 சதவீதம் அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>திரு.சுதாகர், பெரம்பலூர்</td><td>மதிப்பீட்டை விட 5.06 சதவீதம் அதிகம்</td></tr>
</table>
வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சுதாகர், பெரம்பலூர் என்பவர் மதிப்பீட்டை விட 5.06% அதிகமாகவும், திரு.D.கேசவன், திருச்சி என்பவர் மதிப்பீட்டை விட 13.43% அதிகமாகவும் கொடுத்துள்ளனர். எனவே, இரு ஒப்பந்தப்புள்ளிகளிலிருந்து குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்த நிறுவனத்திற்கு</td><td>ஒத்திவைக்கப் பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | ஒப்பந்தப்புள்ளி குறைத்து கொடுக்க இந்நகராட்சியின் மூலம் விலை குறைப்பு கடிதம் (Negotiation) அனுப்பட்டது. ஆனால் கூலி ஆட்கள் ஊதிய உயர்வாலும், கட்டுமானப்பொருட்களின் விலை உயர்வாலும் திரு.சுதாகர், பெரம்பலூர் என்பவர் மதிப்பீட்டை விட 0.10% குறைவாக கொடுத்துள்ளார். இதற்கு கீழும் குறைத்து கொடுக்க இயலாது என கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.<br>எனவே, மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படும் காலவிரயம் மற்றும் கூடுதல் செலவினத்தை தவிர்த்திட திரு.சுதாகர், பெரம்பலூர் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்கலாம். மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். | |
| 17.08.2022 | 120 | அரியலூர் நகராட்சிக்கு குடிநீர் விநியோகம் மூன்று மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மற்றும் குரும்பன்சாவடி குடிநீர் விநியோக அமைப்புகளுக்கு தேவையான சோடியம் ஹைபோ குளோரைட் திரவத்தினை கொள்முதல் செய்திட ரூ.5.00 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்காணும் பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். | அனுமதிக்கப் பட்டது |